# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

**O.S.58/2019**

## CNR.No.TNCB19000

Date: 02.07.2025 PW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | சுப்ரமணி | **வயது** | 76 |
| **த/பெ** | கிருஷ்ணசாமி | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | மேட்டுப்பாளையம் | **மாவட்டம்** | கோயமுத்தூர் |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 2nd July 2025

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் பழைய எஸ் எஸ் எல் சி வரை படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு தற்போது 79 முடிந்து 80 வயது ஆகிறது. வயது குறித்து ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தற்பொழுது நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் எதுவும் இல்லை. நான் ஆரம்பகாலத்தில் என்ன தொழில் செய்தேன் என்றால் தினசரி பேப்பர் போடுவேன், கிழங்கு மண்டியில் ரைட்டராக தொழில் செய்தேன். எனக்கு திருமணம் எந்த வருடம் மாதத்தில் நடந்தது என்றால் ஞாபகம் இல்லை. எனக்கு இரண்டு சம்சாரம். எனது முதல் மனைவி பெயர் பிச்சையம்மாள். அவருக்கு 3 மகன்கள் ஒரு பெண். அவர்களில் முதல் மகன் கிருஷ்ணமூர்த்தி என்பவர்தான் பிரதிவாதி என்றால் சரிதான்.

மற்ற இரு மகன்கள் சிவசங்கர் மற்றும் சங்கரலிங்கம். மகள் பெயர் ராஜேஸ்வரி என்கிற ராஜி அவர் திருமணம் ஆகி கணவருடன் விராலிமலையில் இருக்கிறார் என்றால் சரிதான். எனது மூத்த மகன் கிருஷ்ணமூர்த்தி வெளி நாட்டில் வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு மனைவி மற்றும் 3 பெண் குழந்தைகள் இருக்கிறார்கள்.எனது இளைய மகன்கள் தற்காரி மண்டியில் பி. கே. எஸ் டிரேடர்ஸ்ல் தொழில் நடத்தி வருகிறார்கள்.

எனது இரண்டாவது மனைவி பெயர் முத்துலட்சும் என்றால் சரிதான். அவர் எனது முதல் மனைவியின் உடன்பிறந்த இளைய சகோதரி என்றால் சரிதான். எனது முதல் மனைவி உயிருடன் இருக்கும்போதே இளைய சகோதரியை திருமணம் செய்து கொண்டேன் என்றால் முதல் மனைவிக்கு உடல்நிலை சரியில்லாததால் இளைய சகோதரியை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டேன். அவருக்கு ஒரு மகன் மற்றும் மகள் உள்ளார். மகள் உமாமகேஷ்வரிக்கு திருமணம் ஆகி அமெரிக்காவில் கணவருடன் வசித்து வருகிறார் என்றால் சரிதான். மற்றொரு மகன் பெயர் கௌதம் சக்கரவர்த்தி. அவர் கல்லூரி வரை படித்திருக்கிறார். தற்போது அவர் வீட்டில் உட்கார்ந்து லேப்டாப்பில் வேலை செய்து வருகிறார்.

நானும் எனது இரண்டாவது மனைவியும் பிராதில் சொல்லி உள்ள விலாசத்தில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனது முதல் மனைவி உயிரோடு இருக்கும்பொழுது மாடு வைத்து பால் வியாபாரம் செய்து வந்தார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் எனக்கு நிரந்தர வருமானம் எதுவும் இல்லை என்றால் சரிதான். முதல் மனைவி பால் வியாபாரம் செய்து வந்த வருமானத்தை வைத்துதான் மொத்த குடும்பமும் வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. எனது முதல் மகன் கிருஷ்ணமூர்த்தி பி. ஈ பொறியியல் பட்டப்படிப்பு படித்துள்ளார். மற்ற மகன்கள் அதிகம் படிக்கவில்லை என்பதால் தொழில் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனது முதல் மனைவி நோய்வாய்பட்டு காலமானார் என்றால் சரிதான். அவருக்கு காசநோய் இருந்ததால் இறந்து விட்டார்.

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL
Date: 2025.07.02 19:30:43 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.